பிரதமர் மோடி நாளை சென்னை வருகை

சென்னை, அக். 9: மெட்ரோ ரயில் விரிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கிவைக்க பிரதமர் நரேந்திர மோடி சென்னைக்கு ஞாயிற்றுக்கிழமை (அக்.11) வருகிறார். அவரது வருகையை யொட்டி, சென்னையில் ஐந்தடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்புப் பணியில் 22,000 போலீஸார் ஈடுபடுகின்றனர்.

முதல்வர் விஜய்யுடன் இணைந்து...: சென்னையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக ஞாயிற்றுக்கிழமை (அக்.11) தில்லியிலிருந்து பிரதமர் நரேந்திர மோடி காலை 8.15 மணியளவில் தனி விமானம் மூலம் சென்னை வருகிறார். காலை 11.15 மணிக்கு சென்னை விமான நிலையம் வரும் அவர், கார் மூலம் போரூர் புறவழிச்சாலை மெட்ரோ ரயில் நிலையம் செல்கிறார். அங்கு முதல்வர் விஜய்யுடன் சேர்ந்து போரூர்-பூந்தமல்லி மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் தொடங்கி வைக்கிறார். இருவரும் மெட்ரோ ரயிலில் பயணிக்கின்றனர். அதன் பின்னர் நண்பகல் 12.15 மணியளவில் சென்னை போரூரில் அமைந்துள்ள அருள்மிகுஸ்ரீ ஆதி குபேர ஜலகண்டேஸ்வரர் கோயிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்கிறார்.

மக்களைச் சந்திக்கும் பிரதமர் மோடி: அங்கிருந்து கார் மூலம் கிண்டி ஐஐடியில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்க நண்பகல் 12.30 மணியளவில் வருகிறார். பின்னர் அங்கிருந்து நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறும் நிகழ்ச்சிக்குச் செல்கிறார்.

அங்கு பிற்பகல் 2.40 மணிக்கு நிகழ்ச்சியில் பங்கேற்று பேசுகிறார். நிகழ்ச்சி முடிவடைந்த பின்னர், மாலை 3.45 அங்கிருந்து விமான நிலையத்துக்கு பிரதமர் மோடி செல்கிறார். மாலை 4 மணிக்கு தனி விமானம் மூலம் தில்லிக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

ஐஐடி அருகிலும், நந்தம்பாக்கம் பகுதியிலும் பிரதமர் மோடி சாலையில் நடந்து சென்று மக்களைச் சந்திக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

திறன்களைத் தொடர்ந்து மேம்படுத்துங்கள்

இளைஞர்களுக்கு பிரதமர் அறிவுரை

உலகத் திறன்கள் போட்டியில் இந்தியா சார்பில் போட்டியிட்ட இளைஞர்களை வெள்ளிக்கிழமை சந்தித்து உரையாடிய பிரதமர் நரேந்திர மோடி.

புது தில்லி, அக். 9: தொழில்நுட்பங்களால் இயக்கப்படும் எதிர்காலத்துக்கு ஏற்ப இளைஞர்கள் தங்களின் திறன்களைத் தொடர்ந்து மேம்படுத்த வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தினார்.

சீனாவின் ஷாங்காயில் நடைபெற்ற உலகத் திறன்கள் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்ற இளைஞர்களுடன் பிரதமர் மோடி வெள்ளிக்கிழமை கலந்துரையாடினார். அப்போது பிரதமர் பேசியது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

திறன்மிகு மனித வளங்களின் உலகளாவிய மையமாக இந்தியாவை நிலைநாட்டுவதற்கு இளைஞர்கள், அரசு மற்றும் பயிற்சி நிறுவனங்களின் ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியம்.

வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப இளைஞர்கள் தங்களை தகவமைத்துக் கொள்வதுடன், உலகளாவிய சந்தை தேவைகளுக்கு ஏற்ப திறன்களை வளர்க்க வேண்டும். தங்களின் படிப்பினைகள் மற்றும் ஆலோசனைகளின் வாயிலாக நாட்டின் திறன் பயிற்சி கட்டமைப்பை மேம்படுத்த பங்களிக்க வேண்டும்.

திறன் பயிற்சி நிறுவனங்கள் என்பவை ஐஐடி, ஐஎம்எம் போன்ற உயர்கல்வி நிலையங்களுக்கு சற்றும் குறைந்தவை அல்ல. அந்த அடிப்படையில்தான், திறன் மேம்பாட்டுக்கு தனி அமைச்சகம் அமைக்கப்பட்டது. கல்விசார் பட்டங்களைப் போல் செயல்முறை திறன்களும் மிக முக்கியமானது என்று பிரதமர் மோடி கூறியதாக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகத் திறன் போட்டி என்பது தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப திறன்களில் சிறந்து விளங்கும் இளைஞர்களை ஒருங்கிணைக்கும் நோக்கில் நடத்தப்படுவதாகும்.

சீனாவின் ஷாங்காய் நகரில் கடந்த செப். 22 முதல் 27 வரை 48-ஆவது உலகத் திறன்கள் போட்டி நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் இந்தியா சார்பில் 70 பேர் கொண்ட அணி, 63 பிரிவுகளின் கீழ் பங்கேற்று, 6 வெள்ளி மற்றும் 20 சிறப்பு பதக்கங்களுடன் 10-ஆம் இடம்பிடித்தது.

போட்டியில் பங்கேற்றவர்கள், பிரதமரிடம் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதுடன், அரசின் திறன் மேம்பாட்டு முயற்சிகள் இளைஞர்களுக்கு எவ்வாறெல்லாம் உதவுகிறது என்பது குறித்து உரையாடினர்.

மேலும், சர்வதேச போட்டிகளில் சிறப்பான செயல்பாட்டை உறுதி செய்ய தேவையான புதிய உபகரணங்கள், மென்பொருள், தொழில்நுட்ப அமைப்பு முறை, பிற நடைமுறைகள் குறித்து யோசனைகளைத் தெரிவித்தனர். அவர்களை வெகுவாக பாராட்டிய பிரதமர் மோடி, திறன் மேம்பாட்டின் தூதர்களாக செயல்படும்படி கேட்டுக் கொண்டார்.

தமிழக ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநராக ஏடிஜிபி பிரேம் ஆனந்த் சின்ஹா நியமனம்

சென்னை, அக். 9: தமிழக காவல் துறையின் ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநராக ஏடிஜிபி பிரேம் ஆனந்த் சின்ஹா நியமனம் செய்யப்பட்டார்.

தமிழக காவல் துறையின் ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநராக இருந்த ஏ.அருண், கடந்த ஜூலை 13-ஆம் தேதி பணியிட மாற்றம் செய்யப்பட்டார். இதனால் ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநர் பொறுப்பை கூடுதல் பணியாக அந்தத் துறையின் சிறப்புப் புலனாய்வு பிரிவு ஐஜியாக இருக்கும் சி.மகேஸ்வரி கவனித்து வந்தார். இந்த நிலையில், தாம்பரம் காவல் ஆணையராக இருந்த ஏடிஜிபி பிரேம் ஆனந்த் சின்ஹாவை, ஊழல் தடுப்புப் பிரிவின் இயக்குநராக நியமித்து தமிழக அரசின் உள்துறை முதன்மைச் செயலர் ஏ.கார்த்திக் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

மேலும், அந்த உத்தரவில், தாம்பரம் காவல் ஆணையர் பொறுப்பை கூடுதல் பணியாக சென்னை பெருநகர காவல் துறை ஆணையர் ஏ.அமல்ராஜ் கவனிப்பார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநராக பிரேம் ஆனந்த் சின்ஹா, திங்கள்கிழமை பொறுப்பு ஏற்கிறார்.

பிகாரைச் சேர்ந்தவர்: பிகாரை பூர்விகமாகக் கொண்ட பிரேம் ஆனந்த் சின்ஹா, ஐபிஎஸ் தேர்ச்சி பெற்று கடந்த 2001-ஆம் ஆண்டு தமிழக காவல் துறையில் இணைந்தார். சிவங்கை மாவட்டம் தேவகோட்டை உதவி காவல் கண்காணிப்பாளராக தமிழக காவல் துறையில் தனது பணியை பிரேம் ஆனந்த் சின்ஹா தொடங்கினார். பின்னர் எஸ்.பி.யாக பதவி உயர்வு பெற்ற பிரேம் ஆனந்த் சின்ஹா, பல மாவட்டங்களில் பணியாற்றினார். கடந்த 2013 முதல் 2017-ஆம் ஆண்டு வரை மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவின் சென்னை மண்டல இயக்குநராக இருந்தார். இதன் பின்னர், சென்னை பெருநகர காவல் துறையின் தெற்கு கூடுதல் ஆணையர், மதுரை மாநகர காவல் ஆணையர், தென் மண்டல ஐஜி உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்தார். ஏடிஜிபியாக கடந்த ஜனவரி பதவி உயர்வு பெற்ற அவர், ஆவடி காவல் ஆணையராக நியமிக்கப்பட்டார். கடந்த ஜூன் மாதம் தாம்பரம் காவல் ஆணையராக பிரேம் ஆனந்த் சின்ஹா பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

நவீனத்துக்கு முக்கியத்துவம்: தமிழக காவல் துறையை நவீனமயமாக்குவதில் பிரேம் ஆனந்த் சின்ஹாவின் பங்கு முக்கியமானதாகக் கூறப்படுகிறது. தமிழக காவல் துறை தற்போது குற்றவாளிகளை அடையாளம் காண பயன்படுத்தும் முக அடையாள காணும் செயலி, முக அடையாளம் காணும் கேமராக்கள், ட்ரோன்கள் உள்ளிட்டவற்றை அறிமுகம் செய்ததில் பிரேம் ஆனந்த் சின்ஹா முக்கிய பங்காற்றினார்.

அதேபோல, கரோனா பொதுமுடக்க காலத்தில் இருந்த இ-பாஸ் திட்டத்தை எளிதாக்கியதிலும் பிரேம் ஆனந்த் சின்ஹாவின் பங்கு உண்டு.

இன்று 3 மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்பு

சென்னை, அக். 9: தமிழகத்தில் கோவை, தேனி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் சனிக்கிழமை (அக்.10) பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

குமரிக்கடல் பகுதிகளில் இருந்து வடக்கு உள் கர்நாடகம் வரை தமிழகம் மற்றும் தெற்கு உள் கர்நாடகம் வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் சனிக்கிழமை (அக்.10), கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது. திண்டுக்கல், விருதுநகர், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சனிக்கிழமை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

மழைப்பதிவு: தமிழகத்தில் அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் அழகரை எஸ்டேட்டில் 100 மி.மீ. மழை பதிவானது.

திருக்கோயில் பணியாளர்களுக்கான திருமணக் கடன் உயர்வு

தமிழக அரசு அரசாணை

சென்னை, அக். 9: திருக்கோயில் பணியாளர்களுக்கான திருமணக் கடனை உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

சட்டப்பேரவையில் இதற்கான அறிவிப்பை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சீ. ரமேஷ் வெளியிட்டிருந்தார். இதற்கான அரசாணையை தமிழக அரசு வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

அதன் விவரம்: திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளின் திருமணத்துக்காக ஆண் பணியாளர்களுக்கு ரூ.6,000, பெண் பணியாளர்களுக்கு ரூ.10,000 திருமணக்கடன் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது இந்தக் கடன் தொகை முதுநிலைத் திருக்கோயில்களின் பணியாளர்களுக்கு ரூ.2 லட்சமாகவும், முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.1 லட்சமாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

இந்த உயர்த்தப்பட்ட திருமணக்கடன் தொகை இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் பணிபுரியும் அனைத்து திருக்கோயில்களின் பணியாளர்களுக்கும் பொருந்தும். இந்தக் கடன் தொகை திரும்பப் பெறும் காலம் அரசு ஊழியர்களுக்கான விதிகளின்படி 36 மாதத் தவணையில் பிடித்தம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

கூடுதல் உத்வேகத்துடன் அதிமுக செயல்படும்

சென்னை, அக். 9: 'மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல்கள் வெற்றியால் அதிமுகவை அழிக்கலாம் என யாரும் கனவு காண வேண்டாம்; தமிழர் நலனுக்காக கூடுதல் உத்வேகத்துடன் அதிமுக செயல்படும்' என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் பெரும்பான்மையின்றி ஆட்சியமைத்துள்ள தவெக அரசு பெரும்பான்மையுடன் விளங்க வேண்டும் என்பதற்காக அதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்களிடம் குதிரை பேரம் நடத்தியதால் இடைத்தேர்தல் நடைபெற்றுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் இருந்த கட்சிகள் சில இடைத்தேர்தலில் இடம்பெறவில்லை. ஆனால் ஆளும் கட்சியான தவெக பல கட்சிகளுடன் கூட்டணி அமைத்து தேர்தலில் நின்றது. பண பலம், ஆள் பலத்துடன் அமைச்சர்களை தேர்தல் பணியில் ஈடுபடுத்தியது. அதேநேரம் அதிமுகவுக்கு துரோகம் இழைக்கும் வகையில் சிலர் முதுகில் குத்துவது போல எதிர்த்து நின்றனர்.

இடைத்தேர்தலில் தோல்வி உறுதி என அறிந்த தவெக, பல ஆசை வார்த்தைகளை கூறியும், பொய் வாக்குறுதிகளை அளித்தும், அதிமுக மாவட்டச் செயலர் உள்ளிட்டோர் மீது பொய் வழக்குப் பதிந்து மிரட்டியும் தேர்தலில் வென்றுள்ளது. தெருத்தெருவாக அலைந்து பிரசாரம் மேற்கொள்ளும் கட்டாயம் முதல்வருக்கு ஏற்பட்டது. இது அதிகார பலத்துக்கும், பணநாயகத்துக்கும் கிடைத்த வெற்றியாகும்.

'அதிமுகவை அழிக்க கனவு காண வேண்டாம்': இடைத்தேர்தல்கள் ஆளும் கட்சிக்கு சாதகமாக அமையும் என்பதை கடந்த அதிமுக ஆட்சியின் போது நடைபெற்ற விக்கிரவாண்டி, நாங்குனேரி இடைத் தேர்தல்களில் அதிமுக வெற்றியை வைத்து அறியலாம். எனவே, இது தவெகவுக்கு கிடைத்த இடைக்கால வெற்றியாகும். அதைவைத்து அதிமுகவை அழித்துவிடலாம் என யாரும் கனவு காண வேண்டாம்.

எம்ஜிஆர், ஜெயலலிதாவால் கட்டிக்காத்த இரும்புக் கோட்டைதான் அதிமுக. இடைத்தேர்தல் வெற்றியால் அதிமுக ஆட்சி அமைய வாய்ப்பில்லை என தெரிந்தும் நல்ல வாக்குகள் கிடைத்துள்ளன. எனவே, சோதனையை அதிமுக முறியடிக்கும். அதிமுக ஆலமரம். ஆயிரம் காலத்துப் பயிர். இன்னும் எத்தனையோ தலைமுறைகளுக்கு தமிழருக்காக பாடுபடப்போகும் நல்லியக்கம். தமிழர் நலனுக்காக மேலும் உத்வேகத்துடன் அதிமுக செயல்படும் என்றார் அவர்.

பொய் பிம்ப அரசியல் வீழ்ச்சி தொடக்கம்

மு.க.ஸ்டாலின் விமர்சனம்

சென்னை, அக். 9: இடைத்தேர்தலில் பொய் பிம்ப அரசியல் வீழ்ச்சி தொடங்கிவிட்டது என்று திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் விமர்சனம் செய்தார்.

இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

அதிகார பலம், ஆட்சி பலம், பணபலம், காவல் துறை பலம் ஆகியவற்றைப் பக்கபலமாக வைத்து தவெக இந்தத் தேர்தலை எதிர்கொண்டது. சினிமா கவர்ச்சி பலத்தை மட்டுமே நம்பி அரசியல் களத்தில் குதித்து, பெரும்பான்மை பலம் இல்லாவிட்டாலும் குதிரை பேரங்கள் மூலமாக முதல்வர் ஆகியுள்ள விஜய், இந்த இடைத்தேர்தலிலும் 'ரீல்ஸ்' காட்சிகளே கைகொடுக்கும் என்று நம்பினார்.

வெளியூரில் இருந்து இறக்கிவிடப்பட்ட ஆட்கள், அவர் போகும் சாலைகள் அனைத்தும் வைக்கப்பட்ட 'பேரிகேட்', கொடுக்கப்பட்ட அன்பளிப்புகள், அமைச்சர்களுக்கு மட்டும் எவ்வளவு செலவு செய்துள்ளேன் என்று ஆளும்கட்சி வேட்பாளரே அளித்த வாக்குமூலங்கள் இவை அனைத்தையும்வைத்துப்பார்க்கும்போது இந்த வெற்றியை அடைய தவெக எவ்வளவு பதற்றத்தில் இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. கட்சி, தேர்தல், மக்கள் பணிகள் என்றால் என்னவென்று முதல்வர் விஜய் இனியாவது உணர்ந்து செயல்பட வேண்டும்.

துரோகத்துக்கு இடைக்கால வெற்றி: தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகுதான் மகளிருக்குக் கட்டணமில்லாப் பயண விரிவாக்கம், தாய்மாமன் தங்கமோதிரம், அண்ணன் சீர் போன்ற திட்டங்களை அவர் அறிவித்தார். இதுவே தேர்தல் நடத்தை விதிகளை மீறியதுதான். இப்படி பல்வேறு விதி மீறல்களைச் செய்தே இந்தமுடிவை தவெக பெற்றுள்ளது.

என்னைப் பொருத்தவரையில் துரோகத்துக்கு இடைக்கால வெற்றி கிடைத்துள்ளது. அதே நேரத்தில் பொய் பிம்ப அரசியலின் வீழ்ச்சி தொடங்கிவிட்டது. திரைமறைவில், இன்னும் சில கட்சிகளின் வாக்குகளை வாங்க பொய்ச் செய்தியைப் பரப்பினார்கள்.

ஒட்டுமொத்த அமைச்சரவையும் இரு தொகுதிகளுக்குள் மூன்று வாரகாலம் முடங்கியது. துரோகம் செய்த வேட்பாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்த மக்கள் காவல்துறையினரைக் கொண்டுமிரட்டப்பட்டார்கள்.

என்ன செய்தும், திமுக மீதான மக்களின் நம்பிக்கையை எதுவும் செய்யமுடியவில்லை. திமுகவை மட்டுமே குறிவைத்துப் பேசினார் முதல்வர். ஆனால், திமுகவின் செல்வாக்கை அவரால் அசைக்க முடியவில்லை.

பெரும்பான்மை மக்களால் நிராகரிப்பு: துரோக சக்தியான தவெகவுக்கு எதிராகக் களம் கண்ட அனைத்துக் கட்சிகள் பெற்ற வாக்குகளும் ஆட்சிக்கு எதிரான வாக்குகள் என்பதுதான்! அவைதான் பெரும்பான்மை!. இந்த அரசு மீண்டும் பெரும்பான்மை மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார் அவர்.

4 மாத நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி

அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார்



சென்னை, அக். 9: தவெக அரசின் 4 மாத நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி இது என்று சட்டத் துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார் தெரிவித்தார்.

தாராபுரம், மதுராந்தகம் பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் வெற்றி குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை இடைத்தேர்தலில் தவெக பெற்றுள்ள வெற்றி, தமிழக முதல்வர் விஜய்யின் 4 மாத கால சிறப்பான நல்லாட்சிக்கும், மக்கள் விரும்பிய மாற்றத்துக்கும் கிடைத்த அங்கீகாரமாகும். எவ்வித பண பலமும் இன்றி, நேர்மையான முறையில் தேர்தலைச் சந்தித்து இந்த வெற்றியை தவெக பெற்றுள்ளது.

அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமியின் சுயநல அரசியல் காரணமாகதான் அந்தக் கட்சி 3-ஆவது இடத்துக்கு வீழ்ச்சி அடைந்துள்ளது. அதிமுகவை ஒரு 'லெட்டர் பேட் கம்பெனி' போல எடப்பாடி பழனிசாமி நடத்தி வருகிறார்.

அவரது செயல்பாடுகள் பிடிக்காததாலும், திமுகவுடனான அவரது ரகசிய உறவு காரணமாகவும்தான் அந்தக் கட்சியின் மூத்த தலைவர்களும், எம்எல்ஏ-க்களும் விலகுகின்றனர். தமிழ்நாட்டில் அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த முதல்வர் விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார். விரைவில் முடிவுகள் அறிவிக்கப்படும் என்றார்.

மீண்டும் வாக்குச்சீட்டு முறையில் தேர்தல்

பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தல்

கடலூர், அக்.9: மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளதால், மீண்டும் வாக்குச்சீட்டு முறையில் தேர்தல் நடத்த வேண்டும் என தேமுதிக பொதுச் செயலரும், விருத்தாசலம் தொகுதி எம்எல்ஏவுமான பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தினார்.

கடலூர் மாவட்ட ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமாரை வெள்ளிக்கிழமை சந்தித்த பிரேமலதா விஜயகாந்த், விருத்தாசலம் சட்டப் பேரவைத் தொகுதி மக்களின் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்தார். பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகளும், தலைவர்களும் சந்தேகங்களை எழுப்பி வருகின்றனர். எனவே, தேர்தல் நடைமுறையில் மக்களுக்கு முழுமையான நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில், ஏற்கெனவே நடைமுறையில் இருந்த வாக்குச்சீட்டு முறையை மீண்டும் கொண்டுவருவது குறித்து தேர்தல் ஆணையம் பரிசீலிக்க வேண்டும். மக்கள் யாருக்கு வாக்களிக்கிறார்களோ, அவர்களுக்கே வாக்கு பதிவாகிறது என்ற நம்பிக்கை உறுதி செய்யப்பட வேண்டும்.

இடைத்தேர்தலில் தவெக வெற்றிபெற்றுள்ளது. இது, மக்களின் தீர்ப்பு. தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் தங்களால் இயன்ற அளவில் பணியாற்றுகின்றன. இறுதியில் வாக்களிக்கும் மக்களே தீர்ப்பை வழங்குகின்றனர்.

புதிய மாவட்டம்: விருத்தாசலத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்க வேண்டும் என்பது நீண்டகால கோரிக்கையாகும். இதை தமிழக அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். விருத்தாசலம் தொகுதியில் பட்டா இல்லாமல் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்குவதுடன், அரசுப் பள்ளிகளில் குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். தூய்மைப் பணியாளர்கள், பாதுகாவலர்களை நியமிக்க வேண்டும்.

விருத்தகிரீஸ்வரர் கோயிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, கிரிவலப் பாதை அமைத்து, விருத்தாசலத்தை கோயில் நகரமாக அறிவிக்க வேண்டும் என்றார் அவர்.

HDB FINANCIAL SERVICES

HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : ராதிகா, 2 வது தளம், லா கார்டன், நவ்ரங்புரா, அகமதாபாத் - 09

கிளை அலுவலகம் : HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், எண். 50, II வது தளம், VMR காம்ப்ளக்ஸ், வசந்தா நகர், புறவழிச்சாலை, ஆண்டாள்புரம், மதுரை - 625 003

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

(கடன்தாரர் / கூட்டு - விண்ணப்பதாரர் / பொது மக்களுக்கு) (சர்ஃபாசி சட்டம் 2002 ன் விதி 8(6) - உடன் படிக்க - விதி 9(1) ன் கீழ்)

[illegible]

விண்ணப்பதாரர் & கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி - 1. ஸ்ரீ வெற்றிவேல் ஜுவெல்லரி, 89/4, ... ராமநாதபுரம் - 623501 ... வெளிப்பட்டினம் - 623504. 2. வெங்கடேஷ்வரன் B, 1/4, பாலசுப்ரமணிய சுவாமி கோவில், கிழக்கு தெரு, வெளிப்பட்டினம் - 623 504 தமிழ்நாடு. 3. பவானி U, 1/4, பாலசுப்ரமணிய சுவாமி கோவில், கிழக்கு தெரு, வெளிப்பட்டினம் - 623 504 தமிழ்நாடு. கடன் கணக்கு எண். 43914469. மொத்த நிலுவைத்தொகை : 30.10.2026 ம் தேதியின் படி, ரூ. 52,14,203.18/- [illegible]

ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு தெரிந்த (ஏதேனும் இருப்பின்) வில்லங்கங்களின் விபரங்கள் - இல்லை

அசையா சொத்துக்களின் விபரங்கள் - ராமநாதபுரம் மாவட்டம், ... பட்டா எண். 6, ... சர்வே எண். 292/4, ... TS எண். 23/481A, வார்டு எண். D, ப்ளாக் எண். 13 ல் உள்ள 3220 சதுர அடி ... 7.39 சென்ட் ... 960 சதுர அடி 89.18 சதுர மீட்டர் ... 40 அடி., ... 24 அடி., ... 960 சதுர அடி ... 1/4 ... 900792 ... 292/4 பகுதி, புதிய TS எண். 23/481A, வார்டு எண். D, ப்ளாக் எண். 13 ல் அமைந்துள்ளது.

இதன் எல்லைகளாவன - வடக்கு - ... ப்ளாட் எண். 6 ன் வடக்கு பாகம், தெற்கு - செந்தில் குமாருக்கு சொந்தமான ப்ளாட் எண். 6 ன் தெற்கு பாகம், கிழக்கு - ப்ளாட் எண். 7, மேற்கு - 20 அடி அகல பொது பாதை.

அடிப்படை விலை	டேவணித்தொகை	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	ஏல தேதி & நேரம்	டேவணித்தொகை செலுத்த கடைசி தேதி & நேரம்
ரூ. 58,57,110/-	ரூ. 5,85,711/-	ரூ. 1,00,000/-	30.10.2026 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை	29.10.2026 மாலை 06.00 மணி வரை

விலைப்புள்ளி மற்றும் ஏல விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் - 1). ஏல விற்பனையானது வலைதளம் https://www.bankeauctions.com மூலம் "Online e-auction" ... [illegible] ... "HDB Financial Services Limited" ... M/s. C1 India Pvt Ltd, ... 9948182222, ... 122003, ... support@bankeauctions.com , ... 124-4302020/21/22/23, 7291981124 / 1125 / 1126, ... sales@bankeauctions.com , 7291981129 ... HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், எண். 50, II வது தளம், VMR காம்ப்ளக்ஸ், ஆண்டாள்புரம், மதுரை - 625 003 ... 29.10.2026 ... திரு A. ரஞ்சித் குமார் (99943 75863) & திரு ராஜசேகர் (98941 43049) ... 30.10.2026 ... 11.00 ... 25% ... 75% ... 15 ... 25% ... [illegible]

இடம் : மதுரை தேதி : 09.10.2026 | ஒப்பம்/- அதிகாரப்பூர்வ அலுவலர் M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்.

சுவாதீன (POSSESSION) அறிவிப்பு

[illegible] (Arcil - Trust-2026-015) ... 'ARCIL' ... (DEMAND NOTICE) ... (POSSESSION) ... [illegible]

கடன்தாரர்/ஜாமீன்தாரர் பெயர்	கோரிக்கை அறிவிப்பு தேதி / தொகை	சொத்து விவரம்	சுவாதீன தேதி
திரு. பார்கவி C, திரு. செல்லையா பார்கவி, M/s. அம்பிகா எலக்ட்ரிக்கல் மற்றும் பிளம்பிங் காண்ட்ராக்ட் ஒர்க்ஸ் (வாடிக்கையாளர் எண். L10149161, 913718, 963583)	13/01/2026, L10149161 என்பது ரூ. 290395.01 [illegible] & 913718 என்பது ரூ. 704173.52 [illegible] & 963583 என்பது 286403.51 [illegible]	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், 792/8a மற்றும் 792/9a, தெற்குத் தெரு, மதுரை, தமிழ்நாடு, இந்தியா-625122, ... 1116.00, 543.00. ... 20 அடி சாலை ...	07/10/2026
திரு.அழகு ராஜேஷ், திருமதி. நந்தினி, திருமதி.பேச்சியம்மாள் அழகு (வாடிக்கையாளர் எண். L10418240)	05/01/2026, ரூ.673472.74 (ஆறு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து நானூற்று எழுபத்து இரண்டு மற்றும் எழுபத்து நான்கு பைசா மட்டும்)	... SNO.13/1A1, ... 625108 ... 1660.00, 459.00 ... [illegible]	07/10/2026
திருமதி. சகுஃபர் நிஷா ரஹும் மைதீன், திரு. ரஹும் மைதீன், நிஷா டெய்லரிங் (வாடிக்கையாளர் எண். L10340335)	05/01/2026, ரூ.141271.00 (ஒரு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து இருநூற்று எழுபத்தோரு ரூபாய் மட்டும்)	... எண்: 24, ... 2, பிரிவு D, Track ... 400, T.s.no.1/28 பகுதி, வார்டு F, ... எண்.5, ... 625108 ... 423.00, 275.00 ... [illegible]	07/10/2026
திரு.மாரியப்பன் தர்மராஜ், திருமதி. தர்மராஜ் மாரியம்மாள் (வாடிக்கையாளர் எண். L10792340)	05/01/2026, ரூ. 674819.68 (ஆறு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து எண்ணூற்று பத்தொன்பது மற்றும் அறுபத்தெட்டு பைசா மட்டும்)	... எண்.7/10, புதிய ச எண்.7/10b, ... விருதுநகர், தமிழ்நாடு. 626106 ... 880.00, 465.00, 210.00 ... [illegible]	06/10/2026

[illegible] SARFAESI சட்டம் 2002, பிரிவு 13(13)-ன் ... ARCIL ... [illegible]

இடம்:மதுரை, தமிழ்நாடு
நாள்:10.10.2026

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்., (டிரஸ்டி என்ற அளவில்)

அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்., CIN-U65999MH2002PLC134884. www.arcil.co.in.
பதிவு அலுவலகம்: தி ரூபி, 10-வது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை-400 028. தொ.பே.022 66581300.